2018

කාර්යසාධන වාර්තාව

செயலொற்றுகை அறிக்கை

Performance Report



Web: www.analyst.gov.lk
E-mail: govanalyst@sltnet.lk

ආණ්ඩුවේ රස පරීක්ෂක දෙපාර්තමේන්තුව

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்

Government Analyst's Department

2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த

செயலாற்றுகை அறிக்கை

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்
இல. 31, இசுறு மாத்தை,
பெலவத்த, பத்தரமுல்ல
www.analyst.gov.lk
govanalyst@sltnet.lk

வருடாந்த செயலாற்றல் அறிக்கை - 2018

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்
இல 31, இசுறு மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்ல

அச்சிடல்:
பிரின்டெக் எஸ்டப்ளிஸ்மன்ட் தனியார் கம்பனி
52/1, எக்வத்த வீதி, மிரிகானை, நுகேகொடை - sales@printec.lk
வலைத்தளம் - www.printec.lk

Printed with VOC free, non toxic vegetable oil-based environmentally-friendly ink, on 100% recycled paper using wood free pulp which is made from 100% post consumer waste paper
(Paper recycling is the process of recovering waste paper and remarking it into new paper products.)

Recycling one ton of paper saves
17 mature trees, 26 m3 of water, 2.3 m3 of disposal space, 320 liters of oil, and 4,100 kilowatt-hours of electricity.

We encourage you to recycle this Document after use.

ஏ வலிஅங்க

அரசாங்க பகுப்பாய்வாளர்

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத் தகவல்கள்

1.1 திணைக்களத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் வேலைகள்
1.2 அறிமுகம்
1.3 விடயங்களும் பணிகளும்
1.4 திணைக்களத்தின் கட்டமைப்பு
1.5 திணைக்களத்தின் பிரதான ஆய்வுகூடம்

அத்தியாயம் 02 - திணைக்களத்தின் செயலாற்றல்

2.1 நிதிசார் செயலாற்றல்
2.2 பௌதீக செயலாற்றல்
2.3 சமுதாய முக்கியத்துவமிக்க பகுப்பாய்வு
2.4 ஆய்வுகூட அங்கிகாரச் செயற்பாடு

அத்தியாயம் 03 - சொத்துக்கள் முகாமைத்துவம்

3.1 நிலையான சொத்துக்கள்
3.2 நவீன ஆய்வுகூட பகுப்பாய்வு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

அத்தியாயம் 04 - மனித வள முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகம்

4.1 2018.12.31 இல் பதவியணியினர் தரவு அறிக்கை
4.2 2018 ஆம் ஆண்டின் பட்டப் பின் படிப்பு கற்கை நடவடிக்கைகள்
    4.2.1 உள்நாட்டு பட்டப் பின் படிப்பு
    4.2.2 வெளிநாட்டு பட்டப் பின் படிப்பு

4.3 2018 ஆம் ஆண்டின் பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி நடவடிக்கைகள்
4.4 2018 உள்நாட்டு பயிற்சி மற்றும் மாநாடுகள்

01
அத்தியாயம்

நிறுவனத் தகவல்கள்

1.1. திணைக்களத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்

நோக்கு

நியாயமானதும் நீதியானதுமான சமூகமொன்றை கட்டியெழுப்புதல்

பணிக்கூற்று

நீதிமன்றம், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்களுக்கு நீதிமன்றவியல் மற்றும் உணவியல் துறைகள் சம்பந்தமாக பகுப்பாய்வுகள், நிபுணத்துவ மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

குறிக்கோள்

வினைத்திறனானதும் நியாயமானதுமான உத்திகளை வழங்கும் செயற்பாடுகளுக்குப் பங்களித்தல்

1.2 அறிமுகம்

1904 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் இலங்கை மருத்துவக் கல்லூரிக்கு இணைந்ததாக ஒரு உத்தியோகத்தருடன் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க பகுப்பாய்வு நிறுவனத்தின் முதலாவது பகுப்பாய்வாளராக பிரித்தானிய நாட்டின் திரு கெ,சி.பிரவுண் என்பவர் வரலாற்றில் இடம்பெற்றார்.

இலங்கை மருத்துவக் கல்லூரிக்கு இணைந்ததாக காணப்பட்ட இந்த நிறுவனம் 1913 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் திணைக்களமொன்றாக ஸ்தாபிக்கப்பட்டது. திணைக்களமாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நிறுவனம் 1934 ஆம் ஆண்டின் போது உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் கொழும்பு 07 இல் சுதந்திர சதுக்கத்தில் காணப்பட்ட கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

ஆரம்பம் முதல் வெளிநாட்டு தலைவர்களின் கீழ் காணப்பட்ட இந்த திணைக்களத்தின் முதலாவது இலங்கையின் பகுப்பாய்வாளராக திரு.டபிள்யு.ஆர் சண்முகம் அவர்கள் 1945 இல் நியமிக்கப்பட்டார். அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பணிகளை விரிவுபடுத்தி 1935 இன் போது சந்தேகத்திற்கிடமான ஆவணங்களின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1940 இன் போது முதலாவது சந்தேகத்திற்கிடமான ஆவணங்களின் நடவடிக்கைகளின் அரசாங்க பகுப்பாய்வாளராக திரு.தம்பையா நாகேந்திரன் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

1960 ஆம் ஆண்டின் போது பாதுகாப்பு அமைச்சின் கீழும், 1978 இன் போது நிதி அமைச்சின் கீழும் செயற்பட்டுக் கொண்டிருந்த இதில் முதலாவது பெண் பகுப்பாய்வாளராக 1993 இன் போது திருமதி. யோகராணி மஹேசன் அவர்கள் வரலாற்றில் தடம் பதித்தார்.

ஆய்வு கூடத்திற்காக பொருத்தமற்ற கட்டிடமொன்றில் கணிசமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து நூறு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பழைய கட்டிடமொன்றில் காணப்பட்ட பகுப்பாய்வாளர் திணைக்களம், 2013 ஆம் அண்டின் போது பத்தரமுல்ல, பெலவத்தயில் நிர்மாணிக்கப்பட்ட 06 மாடிகளையுடைய புதிய ஆய்வுகூடம் மற்றும் அலுவலகத் தொகுதியுடைய புதிய கட்டிடமொன்றில் ஸ்தாபிக்கப்பட்டது.

நவீன உபகரணங்களை உள்ளடக்கிய புதிய ஆய்வுகூடத்தை ஸ்தாபித்தல் மற்றும் இணைந்ததாக புதிய தொழில்நுட்ப முறைமையொன்றையும் அறிமுகப்படுத்துவதற்கு முடிந்தமை, குற்ற புலனாய்வுகளை நிறைவேற்றுவதற்காக தேவையான ஆய்வுரீதியான பகுப்பாய்வை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு வழிகோலாக அமைந்தது.

அவ்வாறே குற்றவியல் சம்பந்தப்பட்ட ஆய்வுசெய்யும் செயற்பாட்டிற்கு பங்களிக்கும் போது நீதிமன்றவியல் பிரிவிற்கு அத்தியவசியமாகக் காணப்பட்ட DNA தொழில்நுட்பத்தை இந்த நாட்டில் தாபித்ததன் மூலம் இலங்கை அரசாங்கமும், USAID செயற்திட்டமும் இணைந்து DNA ஆய்வு கூடமொன்று 2013 ஆம் ஆண்டின் போது பகுப்பாய்வுத் திணைக்களத்தின் புதிய கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

2015 இல் ஆரம்பிக்கப்பட்ட கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (KOICA) மூலம் கையளிக்கப்பட்ட செயற்திட்டம் மூலம் திணைக்களத்தின் மேலும் DNA ஆய்வு கூடத்தை அபிவிருத்தி செய்வதற்கும், இலங்கையில் முதல் தடவையாக கணனிமயப்படுத்தப்பட்ட குற்றப் புலனாய்வு ஆய்வுகூடமொன்றை பகுப்பாய்வு திணைக்களத்தில் ஸ்தாபிப்பதற்கும், திணைக்களம் மூலம் குற்றப் புலனாய்வை ஆய்வு செய்வதற்காக வழங்கப்பட்ட விஞ்ஞான ரீதியான சான்றுகள் மேலும் வினைத்திறனாக்குவதற்காக கிடைத்த அரிய வாய்ப்பாகும்.

இதன் மூலம் பெறப்பட்ட ஆய்வுரீதியான பகுப்பாய்வுகளின் உயர் தரத் தன்மையில் 2016 ஆம் ஆண்டின் போது பகுப்பாய்வுத் திணைக்களத்தின் ஆய்வுகூடத்திற்காக ISO 17025 சர்வதேச தரத்தை பெறக்கூடியதாக இருந்தது.

1904 ஆம் ஆண்டின் போது ஒரு உத்தியோகத்தருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த திணைக்களத்திலிருந்து இதுவரையில் 20 ஆவது பகுப்பாய்வாளராக திரு.ஏ.வலிஅங்க அவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 6 ஆவது சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகளின் ஆவணங்கள் பரீட்சகராக திரு.எஸ்.ஏ.பட்டகந்தகே அவர் நியமிக்கப்பட்டிருந்தார். இற்றை வரையில் 78 விஞ்ஞான உத்தியோகத்தர்கள் சேவையாற்றுவதுடன், நீதிமன்றவியல் மற்றும் உணவியல் என்ற பிரதான இரண்டு துறைகளின் கீழ் செயற்படுகின்ற பகுப்பாய்வுத் திணைக்களம் இருந்த போதிலும், சிறப்பான சேவையொன்றை நிறைவேற்றுகின்றது.

1.3 விடயங்களும் பணிகளும்

அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களம் நீதிமன்றவியல் பிரிவு மற்றும் உணவியல் பிரிவு ஆகிய பிரதான இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் அது இலங்கையில் உள்ள ஒரே ஒரு நீதிமன்றவியல் ஆய்வுகூடமுமாகும். நீதிமன்றவியல் பிரிவு, துப்பாக்கி மற்றும் எறிப்படை விஞ்ஞானப் பிரிவு, வெடிபொருள் மற்றும் தீ விசாரணைகள், போதைப் பொருள் பிரிவு, உடல் பாயவியல் விஞ்ஞானம் மற்றும் DNA, நச்சுவியல், சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் மற்றும் டிஜிட்டல் குற்ற விசாரணைப் பிரிவு, மற்றும் நானாவித வழக்குப் பிரிவுகள் என எட்டு பிரிவுகள் உள்ளடங்கும். அவ்வாறே உணவியல் பிரிவு அதாவது இரண்டு பிரதான பிரிவுகளை அதாவது உணவு மற்றும் மதுபானம் எனும் இரண்டு ஆய்வுகூடங்களைக் கொண்டுள்ளது.

இந்த திணைக்களம் சேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிறுவனமாக இருந்ததுடன் நீதிமன்றம், பொலிஸ் திணைக்களம், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம், உள்ளூராட்சி மன்றங்கள், சுகாதார திணைக்களம், துறைமுக அதிகாரசபை, வேறு அரச திணைக்களங்கள் மற்றும் சட்டநியதிச் சபைகள் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற வழக்குப் பொருட்கள், ஏனைய முன்மாதிரிகள் மற்றும் மாதிரிகளை விஞ்ஞான பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் மற்றும் அவை பற்றி விடே அறிக்கை வழங்குதல் செய்யப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக நானாவித அரச திணைக்களங்கள் மற்றும் அரச அனுசரனைகள் பெறும் நிறுவனங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற உணவு, மதுபானங்கள், பால் மற்றும் நீர்சார்ந்த அதனை அண்டிய உற்பத்திகளின் மாதிரிகளின் தரம் பற்றி பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்படுகின்றது. மேலும் நீதிமன்றத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தேகத்திற்கிடமான ஆவணங்களை பரிசோதித்தலும் அறிவித்தலும் மற்றும் சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் பிரிவின் மூலம் செய்யப்படுகின்றது.

பரிசோதனைகளுக்காக அனுப்பப்படுகின்ற சகல வழக்குப் பொருட்கள் அல்லது வேறு மாதிரிகள் ,உணவு மற்றும் மருந்துச் சட்டம், தேசிய சூழல் சட்டம், மதுவரி கட்டளைச் சட்டம், புகையிலை மற்றும் மதுபானம் பற்றிய தேசிய அதிகார சபைச் சட்டம், வாசனைத் திரவியங்கள் உபகரணங்கள் மற்றும் மருந்துச் சட்டம், கிருமிநாசினி கட்டுப்படுத்தல் சட்டம், துப்பாக்கி கட்டளைச் சட்டம், வெடிபொருள் கட்டளைச் சட்டம், நஞ்சு வகை, அபிங் மற்றும் அபாயகரமான மருந்துச் சட்டம், தடைசெய்யப்பட்ட கத்தி சட்டம், மோட்டார் வாகன சட்டம், குற்றவியல் சட்டக் கோவை, சிவில் சட்டக் கோவை, சாட்சி கட்டளைச் சட்டம் போன்ற பல சட்டங்களின் கீழ் பரிசோதனைகளுக்கு உட்படுத்தி அறிக்கை வழங்குவது இந்த திணைக்களத்தினால் செய்யப்படுகின்றது.


மேலும் நாட்டில் நடைபெறும் மனிதக் கொலைகள், பெண்கள் துஃபிரயோகம், துப்பாக்கிச் சூடு, வெடிவைப்பு, தீவைப்பு, மரண வாகன விபத்துக்கள் போன்ற கடுமையான வகையைச் சேர்ந்த சம்பவங்கள் தொடர்பாக குற்ற இடங்களை விசாரிப்பதற்காக உத்தியோகத்தர்களின் நிபுணத்துவ உதவி பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்படுகின்றது. மேலும் அரச பிரதானிகளுக்கான உணவுப் பரிசோதனை நச்சுவியல் (விசப் பிரிவு) பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நீதிமன்றத்தில் நிபுணத்துவ சாட்சியாளர்களாக பகுப்பாய்வு திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற அறிக்கைகள் சம்பந்தமாக எமது உத்தியோகத்தர்கள் தீவிலுள்ள பல்வேறு நீதிமன்றங்களிலும் வாய்மூல சாட்சியமளிக்கின்றனர்.

மேலும் இவ்வாறான சேவைகள் வழங்குவதற்கு மேலதிகமாக இந்த திணைக்களத்தில் உள்ள பல துறைகளில் நிபுணத்துவமுடைய நிபுணர்களால் அரச அனுசரணை பெறும் நிறுவனங்களுக்கு விஞ்ஞான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. விசேடமாக உணவுச் சட்டத்தின் கீழ் காணப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் பலவகை தர அளவுகளை தயாரிக்கும் பொழுது இந்த உத்தியோகத்தர்களின் பெரும் பங்களிப்பு கிடைக்கின்றன. பாதுகாப்பு அமைச்சுக்கு தேவையான ஆயுதங்கள், உபகரனங்கள், வெடிபாருட்கள் மற்றும் ஏனைய இரசாயணப் பொருட்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்யும் போதும் மற்றும் ஏனைய நிறுவனங்களில் உயர் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போதும் தொழில்நுட்பக் குழுவுக்கு நிபுணத்துவ ஒத்துழைப்பு வழங்கப்படுவதும் இந்த உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், குற்றவியல் விசாரணை உத்தியோகத்தர்கள், முப்படை உத்தியோகத்தர்கள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பயிலுநர் சட்டத்தரணிகளுக்கு மற்றும் நீதிமன்ற வைத்திய உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்களுக்காகவும் அவர்களின் நீதிமன்றவியல் மற்றும் உணவியல் மேம்பாட்டிற்காகவும் எமது உததியோகத்தர்களினால் விரிவுரைகள் நடாத்தப்படுகின்றது.

1.4 திணைக்களத்தின் நிறுவகக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

நீதிமன்றவியல் துறை

1. துப்பாக்கி மற்றும் எறிபடை விஞ்ஞான பிரிவு

துப்பாக்கி, மற்றும் எறிப்படை விஞ்ஞானப் பிரிவு என்பவற்றால் மேலும் பல்வேறு வகையிலான ஆயுதங்கள், அதாவது, றைபள், பிஸ்ரல், சுடுகலன்கள், இடிக்கும் சுடுகலன்கள் மற்றும் துப்பாக்கிரவை வகைகளை அருகில் வைத்திருக்கும் போது, இவற்றை குற்றங்களுக்காக பயன்படுத்தப்பட்டதை சந்தேகிக்கின்ற சந்தர்ப்பங்களின் போது அவற்றைப் பரீட்சித்து அறிக்கை வழங்கப்படுகின்றது. ஆயுதங்களைப் பயன்படுத்தும் போது ஏற்படுகின்ற குற்றங்கள் தொடர்பாக ஆழ்ந்த தொடர்புடைய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு ஆய்வு ரீதியான புலனாய்வுகளைச் செய்தல் இதில் உள்ளடங்கியுள்ளது. அதற்காக குற்றச் செயல்களின் போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், ஆயுதங்களின் பாகங்கள், பல்வேறு வகையான துப்பாக்கிரவைகள், சுடப்பட்ட துப்பாக்கிரவைகளின் கோதுகள் மற்றும் சன்னங்கள் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. மேலும், சூட்டுக்கு இலக்காகிய மோட்டார் வாகனம், கட்டிடம், போன்வற்றையும் பரிசோதனைக்கு உட்படுத்துவதுடன் எந்த வகையான ஆயுதம் குறித்த குற்றச் செயல்களுக்காக பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பாக நிபுணத்துவரின் அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

2. வெடிபொருட்கள் மற்றும் தீ புலனாய்வுப் பிரிவு

இந்த பிரிவின் மூலம் குண்டு வெடித்தல், வெடிக்கும் பொருட்கள் மற்றும் வெடிகுண்டு ஏதோவொன்றை தனது பொறுப்பில் வைத்துக் கொள்ளல் என்பவற்றை உள்ளடக்கிய வெடி பொருட்களை பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற குற்றங்களுக்குரிய வழக்குப் பொருட்கள் ஆய்வு ரீதியான பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றது. தமது பொறுப்பில் வைத்திருக்கும் போது கைது செய்யப்பட்ட பல்வேறு வகையான வெடிக்கும் குண்டுகள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டிலும்) இந்த உத்தியோகத்தர்களினால் பகுப்பாய்விற்கு உள்ளாக்கப்படுகின்றது. அவ்வாறே ஆதனங்கள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் போன்றவைகள் தீ பிடிக்கும் போது பொலிசிற்கு செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் மற்றும் காப்புறுதி நட்டஈட்டிற்காக மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கையின் பிரகாரம் அந்த தீ பிடித்தல் தொடர்பாக புலனாய்வு செய்து தீ பிடிப்பதற்கான காரணம் தொடர்பாக அபிப்பிராயமொன்றைச் சமர்ப்பித்தல் இந்த பிரிவு உத்தியோகத்தர்களின் பணிகளில் உள்ளது.

3. போதைப் பொருள் பிரிவு

பொலிஸ், போதைப் பொருள் பணியகம் அல்லது சங்கத்தினால் கைப்பற்றப்படுகின்ற தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் மற்றும் மனோநிலையை பாதிக்கின்ற பொருட்களான ஹெரோயின், கஞ்சா மற்றம் பல்வேறு வகையிலான போதை மாத்திரைகள் போன்றவற்றை இரசாயன ரீதியில் இனங்காணல் மற்றும் அவற்றில் அடங்கியுள்ள செயற்படு நிலையின் செறிவுத்தன்மை என்பவற்றைப் பகுப்பாய்வு செய்து நீதிமன்றத்திற்கு அறிக்கையிடல் இந்த பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

4. நீதிமன்ற உடல்பாயவியல் மற்றும் டீ.என்.ஏ பிரிவு

இழைக்கப்பட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பாக சாட்சியாக பெறப்பட்ட உயிரியல் விஞ்ஞான பொருட்களைப் போன்று உயிரியல் விஞ்ஞான தாய், தந்தை மற்றும் பிள்ளை என்ற இந்த தரப்பினரிடையே தொடர்பினை பெற்றுக் கொள்வதற்காக மனித உடலில் உடற்கூறுகள், பல் மற்றும் உடல் அவயவங்களை உள்ளடக்கிய எந்தவொரு உயிரியல் ரீதியான பொருளொன்றின் அணுவினை பரீட்சித்து டீ.என்.ஏ தொழில்நுட்பம் சார்ந்த அறிக்கையை விநியோகித்தல் இந்தப் பிரிவின் பிரதான பணியாகும்.

அவ்வாறே சிக்கலான மனிதக் கொலைகள் மற்றும் குற்றவியல் இடங்களின் இரத்தக்கறை, கேஸ், இரத்தம் தெறித்தல், தோய்தல், விழுதல் அடையாளம் போன்ற உயிரியில் விஞ்ஞான மற்றும் பௌதீக சாட்சிகளை பரீட்சித்து பகுப்பாய்வின் பின்னர் அறிக்கை விநியோகித்தலும் இந்தப் பிரிவின் கடமைகளாக இருந்தது.

இதற்கு மேலதிகமாக வாகன விபத்துக்களுக்கு உட்பட்ட வாகனங்களின் விபத்து ஏற்பட்ட இடம் மற்றும் உரிய ஏனைய சாட்சிகள் விஞ்ஞான ரீதியில் பரீட்சித்து அந்த விபத்து மீள்வடிவமைக்கப்பட்டு தேவையான முக்கிய சாட்சிகளை கண்டறிதல் இந்தப் பிரிவின் விசேட நிபுணர்களின் பணியாகும்.

5. நீதிமன்ற தச்சுவியல் பிரிவு

நீதிமன்ற தச்சுவியல் பிரிவில் இருக்கின்ற நிபுணரினால் நீதிமன்ற வைத்திய பணிகளுக்காக நச்சு வகைகள் கண்டறியும் வகையில் பகுப்பாய்வு நடவடிக்கைகள் அனேகமாக மேற்கொள்ளப்படுகின்றது. நீதிமன்ற வைத்திய உத்தியோகத்தர்களினால் அல்லது நீதிமன்றத்தினால் கையளிக்கப்படுகின்ற சந்தேகத்திற்கிடமான திடீர் மரணங்களுக்கு உள்ளான நபர்களின் மரண பரிசோதனைகளின் போது பெறப்பட்ட உடற்பாகங்கள் மற்றும் மாதிரிகள், போதைப்பொருள் மற்றும் ஏனைய நச்சு வகைகளான சயனைட், பூச்சிக்கொல்லி வகை, அமில வகை மற்றும் காபன்மொனொக்சைட்டு போன்ற பொருட்களை இனங்காண்பதற்காக பகுப்பாய்வு செய்தல், மதுபோதையில் வாகனங்களை செலுத்துதலை சந்தேகிக்கின்ற சந்தர்ப்பங்களின் போது மற்றும் உயிரிழப்பு வாகன விபத்துக்களின் போதும் மதுபானம் அல்லது ஏனைய மருந்துகளை பாவித்து போதையினை கண்டறிவதற்காக நபர்களின் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல் குற்றவியல் சாட்சிகள் (மருந்து வில்லைகள், நச்சு போத்தல், எஞ்சிய உணவுப் பொருட்கள் போன்றவைகளும்) போதைப் பொருள் நச்சு வகை மற்றும் அமில வகைகளை இனங்காண்பதற்காக இரசாயன பகுப்பாய்வு இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

6. நீதிமன்றவியல் சந்தேக செயற்பாடுகளின் ஆவணப்பிரிவு

நீதிமன்ற ரீதியான மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக தேவையான சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் இந்தப் பிரிவின் மூலம் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றது.

சகல வகைகளினதும் நீதிமன்றவியல் சந்தேகத்திற்குரிய ஆவணங்கள், கையெழுத்து மற்றும் கையொப்பத்தின் உண்மைத் தன்மை என்பன பரீட்சிக்கபடுகின்றன. மேலும் மாற்றுதல், அழித்தல், திரிவுபடுத்துதல், ஒன்றுசேர்த்தல் மற்றும் மாதிரிகள் போன்றவற்றை இனங்காணல், பிரயாண அனுமதிப்பத்திரம், வீசா போன்றவற்றை பரீட்சித்தல், எழுதும் உபகரணங்களின் எழுத்துக்களில் ஒழுங்கு முறையினைப் பரீட்சித்தல், நிறங்கள், கடதாசி மற்றும் ஒட்டும் பொருட்கள், பௌதீக ரீதியில் பரீட்சித்தல், கிழிந்த மற்றும் வெட்டிய அல்லது கிழிக்கப்பட்ட ஆவணங்களைப் பரீட்சித்தல் மற்றும் அவைகள் ஒரு ஆவணத்தின் பகுதிகளா என இனங்காணல் போலியான பணவகைகளை பரீட்சித்தல், லொத்தர் சீட்டுக்களைப் பரீட்சித்தல் ஏதாவது பதிவேடொன்று உண்மையானதாக இல்லையான என்பது தொடர்பாக எழுகின்ற விடயங்கள் தொடர்பாக பரீட்சித்தல், வடிவமைக்கப்பட்ட அல்லது குவிக்கப்பட்ட ஆவணங்களைப் பரீட்சித்தல், வருமான முத்திரை, தபால் முத்திரை மற்றும் (அரசாங்கத்தின்) வருமானத்துடன் தொடர்புடைய ஏனைய ஏதாவது ஆவணங்களை பரீட்சித்தல், நிழற்பட பிரதிகளைப் பரீட்சித்தல் மற்றும் நிழற்பட மாதிரி இயந்திரங்களை இனங்காணல் என்பன இப்பிரிவின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

7. டிஜிட்டல் குற்றப் பகுப்பாய்வு ஆய்வுகூடம்

அண்மைக் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட டிஜிட்டல் குற்ற பகுப்பாய்வு பிரிவு அடிப்படையாக டிஜிட்டல் தரவு பகுப்பாய்வு, டிஜிட்டல் நிழற்பட பகுப்பாய்வு வாய்மொழி மற்றும் ஒலிப் பகுப்பாய்வு மற்றும் உயிரியல் அடையாள பகுப்பாய்வு என்பன 04 அடிப்படை பிரிவுகளின் கீழ் பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

கணனி கையடக்கத் தொலைபேசி, CCTV, DVR இயந்திரம் போன்ற டிஜிட்டல் துணைப்பாகங்களில் உள்ளடங்கியுள்ள தரவுப் பகுப்பாய்வு அவற்றை அழித்து விடப்பட்டுள்ள தரவுகளை மீள் உருவாக்குதல் CCTV வீடியோ தரவுப் பகுப்பாய்வு உயிரியல் அடையாள வகையில் ஊஊவுஏ குறிகாட்டிகளின் எழுந்திருந்த நபர்களின் முகத்தை அடையாளம் காணல், CCTV காட்சிகளில் உள்ளடங்கியுள்ள தெளிவில்லாத வாகனப் பதிவு இலக்க தகடுகளை இனங்காணல், டிஜிட்டல் நிழற்படம் மற்றும் வீடியோ மென் தட்டுக்களை அபிவிருத்தி செய்தலின் பகுப்பாய்வு மற்றும் மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததா என இனங்காணல், வாய்ச்சொல் பகுப்பாய்வு மூலம் பதிவு செய்யப்பட்ட கலந்துரையாடல்களின் வாய்சொற்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் போன்ற பகுப்பாய்வுகள் இதன் போது மேற்கொள்ளப்படுகின்றது.

8. நானாவித குற்றவியல் பிரிவு

பல்வேறு பிரிவுகளில் இருக்கின்ற நீதிமன்றவியல் நிபுணர்களினால் ஏனைய விடயங்களின் கீழ் குறிப்பாக வகைப்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்த பௌதீக சாட்சிகள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றது. சந்தேக செயற்பாடுகளுக்குரிய வாகனங்களின் செசி இலக்கம், மற்றும் என்ஜின் இலக்கம் என்பவற்றைப் பரீட்சித்தல் மற்றும் அவை உள்ளபடியானதாகவும் அல்லது மோசடியானதா என நிர்ணயித்தல் ஒரு உதாரணமாகும்.

மேலும், குற்றங்களுக்கு தொடர்பான பல்வேறு வகை நேரடியான சாட்சிகள் மற்றும் பௌதீக சாட்சிகள் உதாரணம் கண்ணாடி துண்டுகள், வர்ணப் பூச்சு, நிறவகை, மண், ஆயுதம் ஆயுத அடையாளம், நானாவித அடையாளங்கள் (கைவிரல் அடையாளம் தவிர) இலாஞ்சனை முதலியவற்றுக்காக பரிசோதனை மற்றும் பல்வேறு தொழில்நுட்ப இரசாயன உபகரணங்களை பயன்படுத்தி இரசாயன ரீதியான பகுப்பாய்வு இந்த பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

உணவியல் துறை

1. உணவுப் பிரிவு

1980 இன் 26 ஆம் இலக்க உணவுத் திட்டத்தின் கீழ் சுகாதார திணைக்கத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களில் (சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள், உணவுப் பரிசோதனையாளர்கள், பொது சுகாதார பரிசோதகர் போன்ற) சமர்ப்பிக்கப்படுகின்ற உணவு மாதிரிகள், பால் மற்றும் பால்சார்ந்த உற்பத்திகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை விநியோகித்தல்) உணவு கட்டுப்பாட்டு அலகின் மூலம் ஏனைய அரச நிறுவனங்களின் மூலம் அவ்வாறான உணவு கட்டுப்பாட்டு அலகின் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்ற அவ்வாறான உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தர அறிக்கை விநியோகித்தல் மற்றும் சுங்க திணைக்களம், நுகர்வோர் அலுவல்கள் அதிகாசபை, இலங்கை தேயிலை சபை, மற்றும் இலங்கை நியமங்கள் நிறுவனம் போன்றவற்றினால் சமர்ப்பிக்கப்படுகின்ற மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்து அறிக்கை விநியோகித்தல், தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்காக குடிநீர் மற்றும் கைத்தொழில்களில் கழிவுநீரை பகுப்பாய்வு செய்து தர அறிக்கை விநியோகித்தல்.

2. மதுபானப் பிரிவு

நீதி மன்றத்தினால் சமர்ப்பிக்கப்படும் நீதி விரோத மதுபானம் மற்றும் புகையிலை பொருட்களையும் மற்றும் மதுவரி திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படும் மதுபானங்களையும் பகுத்தராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தல். மதுவரிச் சட்டத்தின் சீழ் மேலுள்ள மதுபான வகைகள் பகுத்தராய்ந்து அறிக்கை வழங்கப்படுகின்றது. மதுவரித்திணைக்களத்தினால் அனுமதிப்பத்திம் வழங்கப்படும் உள்ளூர் வெளிநாடு மதுபானவகைகளிற்கு தராதரப் பகுப்பாய்வு அறிக்கைகாக எமது திணைக்களத்திற்கு மதுவரித் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்றது. இவ் பகுப்பாய்விற்காக. கட்டணம் அறவிடப்படுகின்றது. இவ்வாறு 2018 ம் வருடத்தில் ரூபா 6,327,700 அறவிடப்பட்டு பதவிக்காலத்தில் ஒருங்கிணைந்த நிதிக்கு வரவு வைக்கப்பட்டது.

3. நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு

திணைக்களத்தின் முக்கியமான நோக்கமான வினைத்திறனாகவும் நியாயமானதாகவும் உத்தியொன்றை பயன்படுத்தும் செயற்பாடுகளுக்கு பங்களிப்பதற்காக தேவையான வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நிதியினைச் சேகரித்தல் மற்றம் அவற்றை வினைத்திறனாகவும், ஆக்கபூர்வமானதாகவும், சிக்கனமானதாகவும் செயற்படுதவன் மூலம் நிதி முகாமைத்துவம் மற்றும் அது தொடர்பான கணக்கு செயற்பாடுகளை பேணிச் செல்லலும், நிதிசார் தகவல்கள் தேவையான ஏனைய தரப்பினர்களுக்கு வழங்குதலும் நிதிப் பிரிவின் பொறுப்பாகும்.
அந்த செயற்பாடுகளை செய்யும் போது,

- வினைத்திறனாகவும், ஆக்கபூர்வமானதாகவும் முகாமைத்துவ முறைமையினை அமுல்படுத்துதல்
- நிதிசார் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்
- நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- அரசாங்க நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கநிதியினைப் பயன்படுத்துதல்
- கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல்

நிர்வாகப் பிரிவு

பயிற்சி மற்றும் வினைத்திறனான மனித வளங்களை வழங்குவதை உறுதிப்படுத்துதலும், வினைத்திறனானதும், நியாயமானதுமான உத்திகளை அமுல்படுத்துவதற்கான பங்களிப்பை வழங்கும் போது தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய தொடர்புபடுத்தும் நடவடிக்கைகளும், இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் கீழ் பணியிடமாற்றம் செய்தல், பதவியுயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள், மேலதிக நேரம், பிரயாணச் செலவினம் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களின் போது நிர்வாகத்திற்கு உரிய உள்ளக சுற்றறிக்கைகளை விநியோகித்தல் இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

02
அத்தியாயம்

திணைக்களத்தின் செயலாற்றல்

2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிஏற்பாடு செலவு செய்யப்பட்ட விதம்

2018 வரவு செலவு மதிப்பீட்டின் மூலம் செலவு தலைப்பு 233 நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 01 செயற்றிட்டம் 01 இன் கீழ் இந்த திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிஏற்பாடுகள் செலவு செய்யப்பட்ட விதம் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீடுசெய்து கீழே தரப்பட்டுள்ளது.

(000')

செலவு விபரம்	2017			2018		
	அங்கீகரி-க்கப் பட்ட நிதிஏற்பாடு ரூபா	மொத்தச் செலவு ரூபா	செலவு வீதம்	அங்கீகரி-க்கப் பட்ட நிதிஏற்பாடு ரூபா	மொ-த்தச் செலவு ரூபா	செலவு வீதம்
மீண்டுவரும் செலவு	267,219	250,807	94	336,955	319,794	94
தனிநபர் சம்பளங்கள்	131,620	130,837	99	145,300	144,331	99
பிரயாணச் செலவினம்	3,605	3,549	98	5,580	5,540	99
வழங்கல்	48,490	38,735	80	107,250	92,490	86
பராமரிப்புச் செலவினம்	16,805	13,283	79	11,860	11,714	98
சேவை	57,820	55,743	96	56,225	55,174	98
மாற்றுதல்	1,940	1,914	99	2,200	2,030	92
வெளிப் பகுப்பாயிவிற்கான கொடுப்பனவு	6,939	6,742	97	8,540	8,510	99
மூலதன செலவு	108,260	103,085	95	98,740	70,397	71
மூலதன சொத்துக்களில் புனரமைப்பு மற்றும் மேம்படுத்-தல்	500	495	99	740	488	66
மூலதன சொத்துக்களை கைப்பற்றுதல்	82,000	76,993	94	76,050	47,959	63
இயலுமை விருத்தி	10,900	10,738	99	21,950	21,949	99
மொத்தச் செலவினம்	375,479	353,892	94	435,695	390,192	89

அரச உத்தியோகத்தர்களுடைய முற்பணம் "பீ" கணக்கு

(000')

விபரம்	2017		2018	
	அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ரூபா ஆயிரம்)	உள்ளபடியான செலவு (ரூபா ஆயிரம்)	அங்கீகரிக்க-ப்பட்ட எல்லை (ரூபா ஆயிரம்)	உள்ளபடியான செலவு (ரூபா ஆயிரம்)
உச்ச செலவின எல்லை	8,000	7,330	9,000	8,537
ஆகக் குறைந்த வரவு எல்லை	5,500	5,887	5,500	6,183
உச்ச வரவு மீதி எல்லை	35,000	18,149	32,000	20,523

2.2 பௌதீக செயலாற்றல்

2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை பகுப்பாய்வு அறிக்கைகளின் முன்னேற்றம்


துறை	பிரிவு	2018.01.01 ஆம் திகதி வரையில் அறிக்கை வழங்க-ப்படாதுள்ள வழக்குக-ளின் எண்ணிக்கை	கிடைக்கப் பெற்றுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	அறிக்கை வழங்க-ப்படாத வழக்குகளின் எண்ணிக்கை	2018.12.31ஆம் திகதியில் உள்ளவாறு அறிக்கை வழங்கப்பட-ாதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை
நீதிமன்றவியல்	போதைப் பொருள் மற்றும் மனோதத்துவம்	1,484	14,643	11,242	4,885
	துப்பாக்கி மற்றும் எறிபடை அறிவியல்	280	412	434	258
	வெடிபொருள் மற்றும் தீ விசாரணை	153	464	497	120
	நச்சுவியல் பிரிவு (விச வகை)	1,306	2,714	2,371	1,649
	உடற்பாயவியல் மற்றும் DNA	1,999	1,751	1,052	2,698
	சந்தேகத்திடமான ஆவணம்	467	880	853	494
	கணனிமயப்படுத்தப்பட்ட டிஜிட்டல் குற்றம்	211	708	327	592
	பல்வகை அறிவியல் வழக்கு	204	462	362	304
	மொத்தம்				11,000
உணவியல்	மதுபானம்	20	5,483	5,417	86
	மதுசாரம் மற்றும் புகையிலை	29	3,118	3,047	100
	உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள்	13	9,016	8,759	270
	பல்வகை உணவு வகை	02	2,515	2,286	231
	மொத்தம்			687	
	மொத்தம்	**6,168**	**42,166**	**36,647**	**11,687**

உணவியல் பிரிவின் அறிக்கை தாமதமின்றியும், குறுகிய காலத்திற்குள்ளும் அறிக்கை வழங்கப்படுகின்றது. எனினும் நீதிமன்றவியல் பிரிவின் வழக்குப் பொருட்களின் பகுப்பாய்வின் போது ஏதாவது தாமதம் ஏற்படுவதுடன் இதன் போது அந்தப் பிரிவிற்கு கிடைக்கின்ற வழக்குப் பொருட்களின் எண்ணிக்கை உயர்வடைந்து சென்றமை மற்றும் பல்வேறு வகையான குற்றச் செயல்களுக்குரிய வழக்குப் பொருட்களுக்குரிய பல்வகைத்தன்மை, சிக்கல்கள் மற்றும் தேவையான பகுப்பாய்வுகளின் சிக்கலான தன்மை என்பன இதற்கு காரணங்களாக இருந்தன.

கிடைத்த மற்றும் அறிக்கை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையை ஒப்பிடுதல்

வருடம்	கிடைத்த வழக்குகளின் எண்ணிக்கை	அறிக்கை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை
2017	32,388	31,164
2018	42,166	36,647

வழக்குகளின் எண்ணிக்கை



2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டினுள் கிடைத்த வழக்குகளின் எண்ணிக்கை 9,778 இனால் அதிகரித்துள்ளது. ஆனால் 2018 ஆம் ஆண்டின் போது 2017 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் எண்ணிக்கையினை விட 5,483 இனால் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் முடிவில் அறிக்கை வழங்கப்படாத எஞ்சிய வழக்குகளின் எண்ணிக்கை 6,168 ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் அறிக்கை வழங்கப்படாத எஞ்சிய வழக்குகளின் எண்ணிக்கை 5,519 இனால் அதிகரித்திருந்தது. இதனிடையே ஆண்டின் முடிவில் அறிக்கை வழங்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு முன்னைய ஆண்டை விட கிடைத்த வழக்குகளின் எண்ணிக்கை 9,778 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது. மேலும் இந்தக் காலத்தில் மனித வள அதிகரிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

வழக்குப்பொருள் பகுப்பாய்விற்கு மேலதிகமாக இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்களில் வாய்மொழி மூல சாட்சியங்களை வழங்குதல் மற்றும் பல்வேறு குற்றத் தடயங்களின் புலன் விசாரணைக்காக உத்தியோகத்தர்கள் பங்குபற்றுதல், அறிக்கையிடப்படாத வழக்குகளின் எண்ணிக்கை உயர்வடைந்து சென்றமை தொடர்பில் நேரடியாகத் தாக்கமளித்திருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தரினால் கௌரவ நீதிமன்றம் முன்னே வாய்மொழி மூல சாட்சியங்களை வழங்கிய சந்தர்ப்பங்கள், பரீட்சிக்கப்பட்ட குற்றத் தடயங்களின் எண்ணிக்கை மற்றும் இலங்கைக்கு வருகை தருகின்ற இராஜதானிகளுக்கான உணவுகள் பரீட்சிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அறிவுரைகளின் எண்ணிக்கை என்பன பின்வருமாறு,

கௌரவ நீதிமன்றங்களில் வாய்மொழி மூல சாட்சியங்களை வழங்கிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை - 416
குற்றத் தடயங்களின் புலனாய்விற்காக பங்குபற்றிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை - 194
நச்சுவியல் பிரிவின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றும் பிரதானிகளின் உணவு பரீட்சிப்பு எண்ணிக்கை - 33
உத்தியோகத்தர் நாட்கள்
குற்றவியல் மற்றும் உணவியல் தொடர்பாக ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக விரிவுரைகளை நடாத்துதல். - 47 விரிவுரைகள்

2.3 சமூக முக்கியத்துவமிக்க பகுப்பாய்வுத் தகவல்கள்

துப்பாக்கி மற்றும் எறிபடை விஞ்ஞான பிரிவு

துப்பாக்கி மற்றும் எறிபடை ஆய்வுகூடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகளுக்கிடையே பிரதானமாக சட்டவிரோதமாக துப்பாக்கிளை தமது பொறுப்பில் வைத்திருத்தல், சுடுதல் மற்றும் தொடர்புடைய துப்பாக்கிகள் மற்றும் அதற்குரிய ஏனைய வழக்குப் பொருட்கள் என்பன பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

பிஸ்தோல், ரிவோல்வர், றைபிள், தானியங்கி துப்பாக்கி, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சிறு துப்பாக்கி தோட்டாக்கள் போன்றவை இந்தப் பிரிவில் பரீட்சிக்கப்படுகின்ற வழக்குப் பொருட்களாகும்.

2018 ஆம் ஆண்டில் அறிக்கை வழங்கப்பட்ட வழக்குகளுக்குரிய புள்ளிவிபர ரீதியான பெறுமதிகள் கீழே

அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

தன்மை	அறிக்கைகளின் எண்ணிக்கை	சதவீதம்
துப்பாக்கிளை தமது பொறுப்பில் வைத்திருத்தல்	193	45%
சுடுதல்	182	42%
ஏனைய	59	14%
மொத்தம்	434	

நச்சுவியல் ஆய்வுகூடம்

நீதிமன்ற வைத்திய உத்தியோகத்தர்களினால் மரணப் பரிசோதனைகளின் போது வழங்கப்பட்ட உடற் பாகங்கள் மற்றும் சரீர கூறுகளுக்கிடையே வீதி வபத்துக்களினால் மரணமடைந்த நபர்களிடமிருந்து இரத்த மாதிரிகள் நச்சுவியல் பிரிவின் போது எதைல் மதுசாரத்திற்காக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. நீரில் மூழ்கிய மரணங்கள் மற்றும் தூக்கில் தொங்கி மரணமடைந்த நபர்களின் இரத்தம் மதுசாரத்திற்காக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

அவ்வாறான இரத்த மாதிரிகளில் மதுசாரம் இனங்காணப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை கீழே அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

	பகுப்பாய்வுகளின் எண்ணிக்கை	மதுசாரம் இனங்க-ாணப்பட்ட எண்ணிக்கை	சதவீதம்
வீதி விபத்துக்கள்	342	230	67%
நீரில் மூழ்கிய	29	18	62%
தூக்கில் தொங்கியவை	48	29	60%
மொத்தம்	419	277	

கணனி குற்றவியல் பகுப்பாய்வுப் பிரிவு

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கணனி குற்றவியல் பகுப்பாய்வுப் பிரிவு தற்போது இலங்கையில் காணப்படுகின்ற கணனி குற்றவியல் பகுப்பாய்வு மற்றும் புலனாய்வு சேவைகளை வழங்குகின்ற ஒரே ஆய்வுகூடமாகும். இந்த பகுப்பாய்வு பிரதான 04 பகுதிகளைக் கொண்டது.

1. Digital - கணனி மற்றும்லெப்டொப் கணனிகளின் இறுவெட்டு, ஊஊவுஏ, டீ.வீ.ஆர் இயந்திரங்களின் இறுவெட்டு மற்றும் கையடக்கத் தொலைபேசி பகுப்பாய்வு
2. Image - வாகன இலக்கத் தகடு மெருகூட்டுதல் மற்றும் இனங்காணல், நிழற்படம், டிஜிட்டல் நிழற்படம் அல்லது வீடியோ காட்சி உள்ளடக்கங்களை பரீட்சித்தல்.
